முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1006

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.07.2022, வெள்ளிக்கிழமை

1. தர்மவேலிகொண்ட அரங்கனே
தவசியாக வாழும் தேசிகனே
பெருமைசேர்க்கும் தொண்டர்படைகளை
பேருலகம் எங்கிலும் நிறுவி இனிதே
2. இனிதே உலகமாற்றம் நிகழ்த்த
என் சக்தியாய் வந்த ஆறுமுக அரங்கனே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 17 நாள், 01.07.2022 வெள்ளிக்கிழமை)
வரமாக உன் சக்தி பெருகி வர வையகம் உன் அருள்பலத்தாலே
3. அருள்பலத்தால் மாற்றம் காணக்கூடும்
ஆக்கமான தொண்டர்படைகள் உலகமெங்கும் பரவி
முருகப்பெருமான் என் வழிபாட்டை இனிதே செய்து
முழுமைதரும் உன் தர்மத்தை உலகமெங்கும் வளர்த்து
4. வளர்த்து இந்த பேருலகம்
வள்ளல் தன்மை கொண்ட அன்பர்கள் நிரம்ப
தளர்விலா ஞானபூமியாகும்
தர்மத்தை காக்கின்ற மகா சக்திநிலை கூடும்
5. கூடவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
குருமார்க்கமாக அரங்கன் காட்டுகின்ற சன்மார்க்கமே
நாடெங்கிலும் அற்புதத்தை நிகழ்த்தும் ஞானமார்க்கமாகும்
நம்பி உலகோர் தொடர்ந்து வருகை புரிய
6. வருகைபுரிய வடிவேலன் என்னைக் காணும்
வல்லமையும் அதீத சூட்சுமமும் அடையக்கூடும் இடரின்றி
தர்மத்தை கைக்கொண்டு எங்கெல்லாம் அரங்கன் நாமஜெபத்தைச் சொல்லி
தடையற சரவண ஜோதி ஏற்றி தர்மத்தை காத்து வருகின்றாரோ
7. வருகின்ற பூமி எல்லாம் வடிவேலன்
வழிவிட்டு அங்கு ஞானச்சுடராக
தருகின்ற மாந்தர்களை காத்து
தர்மத்தின் வழி இந்த உலகத்தையே மீட்டு
8. மீட்டுமே அரங்கன் விரும்புகின்ற
மேலான ஞான யுகமாற்றம் தந்தருள்வேன்
ஆற்றல்பட இந்த அற்புதம் நிகழ
அகிலத்தாரே அரங்கன் சபை நோக்கி வாரீர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–